1982 மார்ச் 5] (மாண்புமிகு பேரவைத் தலைவர்)

இவ்வளவு நேரம் அமைச்சரவர்கள் அந்தக் கிராமத்திலே உள்ள மக்கள் நிம்மதியாக செட்டிலாகிவிட்டார்கள் என்று சொன்னார். நாம் சண்டையை வளர்க்கக் கூடாது.

மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(3) கவன ஈர்ப்பு.

மதுரை மாவட்டம் தேவாரத்தில் துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். திரு. துரை முருகன் அவர்கள் இருக்கையில் இல்லை.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, திரு. துரைமுருகன் சார்பில் நான் இதைக் கொண்டுவருகிறேன்:

"மதுரை மாவட்டம் தேவாரம் என்ற கிராமத்தில் 5—1—1982 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்த"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதிலே முப்பது பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. மொத்தம் கைது செய்யப்பட்டவர்கள் முப்பத்தி மூன்று பேர். அதிலே முப்பது பேர் பிரிவின்டேவ் அரஸ்ட் என்றும், மூன்று பேர் வேறு பல தனி வழக்குகளின் சார்பாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே முப்பத்தி மூன்று பேர் என்று திருத்திக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 5

அறிக்கை

அரசுக்குக் கிடைத்தத் தகவலின்படி மதுரை மாவட்டம், உத்தம பாளையம் தாலுக்கா தேவாரம் கிராமத்தில் 15—1—1982 அன்று பிற்பகல் மூன்று மணி அளவில் மாட்டுப் பொங்கலையொட்டி மஞ்சு விரட்டு விழா நடைபெற்றதைத் தொடர்ந்து தேவர் மற்றும் நாடார் இனத்தவருக்கிடையே மோதல் ஏற்பட்டது. நாடார் இனத்தவருக்குச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்த மான காளையை தேவர் ஒருவர் அடக்கினார். இதனால் கோபம் அடைந்த அக்காளையின் சொந்தக்காரர் காளையை அடக்கியவரை ஒரு கழியால் அடித்தார். இதையொட்டி இவ்விரு இனத்தவரிடையே மாலை ஐந்து மணி யளவில் பெருத்த கலவரம் மீண்டும் மூண்டது. இரு சாராரும் ஒருவர் மீது ஒருவர் கற்களால் தாக்கிக்கொண்டனர். பந்தோபஸ்து பணியில் ஈடுபட்டி ருந்த காவலர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர். காவலர் ஒருவர் கூட்டத்தினரால் தாக்கப்பட்டார். கூட்டத்தைக் கட்டுப்படுத்தக் காவலர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எதுவும் தக்க பலனை அளிக்கவில்லை. அவர்கள் முதலில் செய்த பிரம்படி பிரயோகம் கூட்டத்தைக் கலைக்கப் பயன்பட வில்லை. எனவேத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஒன்பது தடவை ரப்பர் தோட்டா (Buck Shots) பிரயோகமும் மூன்று தடவை தோட்டா (Ball Ammunition) பிரயோகம் செய்யப்பட்டது. காவலர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் நாடார் பக்கத் திலிருந்து யாரோ துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிகிறது. இதனால் முத்துக்கருப்ப தேவரின் மகனான சந்திரன் என்பவருக்கு பலத்த காயம் எற்பட்டு அவர் உத்தமபாளையம் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார். காயமடைந்த இருபத்தியிரண்டு பேர்களும் உத்தமபாளையம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். இந்நிகழ்ச்சி தொடர்பாக முப்பது பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

2. இறந்த சந்திரன் காவலரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தாரா அல்லது நாடார் பக்கமிருந்து செய்யப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் மரண மடைந்தாரா என்பது தெரியவில்லை. இது சம்பந்தமாக இரு வழக்குகள்

பதிவு செய்யப்பட்டுள்ளன; உத்தமபாளையம் தாசில்தார் தலைமையில் ஒரு சமாதானக் குழு அமைக்கப்பட்டுள்ளது; தேவாரம் பகுதியில் தனியார் கைவசமுள்ள லைசென்ஸ் பெற்ற அல்லது லைசென்ஸ் பெறாத துப்பாக்கிகளை கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

3. இந்நிகழ்ச்சி குறித்து கூடுதல் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் மற்றும் மதுரை டி. ஆர். ஓ. மூலம் மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார்; நிலைமை தற்போது கட்டுக்குள் அடங்கியுள்ளது.

4. அறிக்கை அளித்தல்.

விதி 106-ன் கீழ் ஹஜ் யாத்திரிகர்கள் பற்றிய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 106-வது விதியின்கீழ் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஹஜ் பயணம் மேற்கொள்ளக் கூடிய புனித யாத்திரிகர்கள் பம்பாயிலே இருக்கக்கூடிய மத்திய ஹஜ் குழுவினிடம் அனுமதி பெற்று அவர்கள் தேர்வு செய்ததற்குப் பிறகுதான் அந்தப் பயணத்தை மேற்கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு மேற்கு வங்காளம், காஷ்மீர், உத்தரப்பிரதேசத்திலேயிருப்பதைப் போல தமிழகத்திலேயும் இங்கே இருக்கக்கூடிய ஹஜ் குழுவே மேற்படி புனித பயணத்திற்குச் செல்லக் கூடியவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நான் இந்த அறிக்கையின் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.